**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**

**<u>அசல் வழக்கு எண்.</u> 24/2014** **நாள். 04.02.2026**

**<u>வாதி தரப்பு சாட்சி எண்.</u> 1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : ராஜ்குமார் | ஊர் | : | தேனி |
| தந்தை பெயர் | : ராஜகோபால் | தாலுகா | : | தேனி |
| தொழில் | : Business | வயது | : | 49/2026 |

ஆணையுறுதி சட்டப்படி, மொழிப்பெயர்பாளர் செல்வி. சுதாமணி மூலமாக சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை</u>:**

நான் இந்த வழக்கின் 2 ஆம் வாதி ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கின்றேன். அவற்றை

வாதிகள் தரப்பு சான்று ஆவணங்களாக அங்கீகரித்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கிறேன்.

1. 26.11.1990 ஆம் தேதியிட்டு எங்கள் நிறுவனத்திற்கு வணிக வரி துறை வழங்கிய பதிவு சான்று அசல் **வா.சா.ஆ. 1**

2. 01.08.1995 ஆம் தேதியிட்டு எங்களின் நிறுவனத்திற்கு மாவட்ட பதிவாளர் அவர்கள் வழங்கிய பதிவு ஒப்புகை அசல் **வா.சா.ஆ.2**

3. 11.06.2002 ஆம் தேதியிட்டு சிட்கோ வழங்கிய பதிவு சான்று அசல் **வா.சா.ஆ.3**

4. 08.11.2002 ஆம் தேதியிட்டு மாவட்ட சிட்கோ இன்டஸ்டிரிஸ் எங்களின் நிறுவனத்திற்கு வழங்கிய நிரந்திர பதிவு சான்று அசல் **வா.சா.ஆ.4**

5. 16.11.1994 ஆம் தேதியிட்டு எங்களுக்கு மற்ற பங்குதாரர்கள் எழுதிகொடுத்த கூட்டு பங்கு விடுதலை பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.3765/1994 **வாசா.ஆ 5**

6. 31.03.2001 ஆம் தேதியிட்டு 1 ஆம் பிரதிவாதி எங்களுக்கு எழுதி கொடுத்த கூட்டு பங்கு உலவீன பத்திரம் அசல் ஆவண எண்.3173/2001 **வா.சா.ஆ.6**

7. 10.06.2013 ஆம் தேதியிட்டு நாங்கள் செலுத்திய சொத்து வரி ரசீதுகள் 4 எண்ணம் அசல் **வா.சா.ஆ. 7**

8. 28.01.2014 ஆம் தேதியிட்டு நாங்கள் செலுத்திய மின் கட்டண ரசீதுகள்4 எண்ணம் அசல் **வா.சா.ஆ. 8**

9. 01.06.2011 ஆம் தேதியிட்டு எங்களின் நிறுவனம் புதுப்பிப்பதற்கு கட்டிய கட்டண ரசீது அசல் **வா.சாஆ. 9**

10. 12.04.2016 ஆம் தேதியிட்டு 1 ஆம் வாதி 3 ஆம் வாதிக்கு எழுதி கொடுத்த பதிவு உயில் சாசனம் அசல் **வா.சா.ஆ. 10**

11. 25.01.2025 ஆம் தேதியிட்டு 1 ஆம் வாதி இறந்ததை காட்டக்கூடிய இறப்பு சான்று கணிணி நகல் **வா.சா.ஆ–11**

பிராது படி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**(Sd/– C. Sankar)**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**